# சங்கரன்கோவில் நகராட்சி

**2021-ம் ஆண்டு ஜூலை மாதம் 23.07.2021ம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு அவசரக்கூட்டம்**

பொருள் எண் : 1191

தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் காணொளி வாயிலான ஆய்வுக்கூட்டத்தில் சங்கரன்கோவில் நகராட்சிப் பகுதியில் அடிப்படை வசதிகள் மேற்கொள்வது குறித்து அறிவுரைகள் வழங்கியுள்ளார். இந்நகராட்சியில் நிதிநிலை சீராக இல்லாததால் சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள இயலவில்லை. எனவே மேற்கண்டவாறு பழுதடைந்த சாலைகள் மேம்பாடு மற்றும் மயானம் சுற்றுச்சுவர் கழிப்பறை வசதி மற்றும் பூங்கா அமைத்தல் மற்றும் மறுசீரமைப்புபணிகள் செய்ய நகராட்சி நிதிநிலைக் கருத்தில் கொண்டு முழு மானியத்தொகை அனுமதித்து வழங்க விரிவான பிரேரணை தயார் செய்து அனுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு( ரூலட்சத்தில்) |
|---|---|---|
| **I . சாலைப்பணிகள் (மண்சாலை)** | | |
| 1. | பாரதியார் 5ம் தெருவில் தார்ச்சாலைஅமைத்தல் | 12.50 |
| 2. | காந்திநகர் கீழ 4ம் தெருவில் தார்சச்சாலைஅமைத்தல் | 40.00 |
| 3. | காமராஜ்நகர் 1ம் தெருவில் தார்சச்சாலைஅமைத்தல் | 11.00 |
| 4. | காமராஜ்நகர் 3ம் தெருவில் தார்சச்சாலைஅமைத்தல் | 13.50 |
| 5. | பாட்டத்தூர் முதல் கிழக்குதெருவில் பேவர் பிளாக் சாலைஅமைத்தல் | 6.00 |
| 6. | கணபதிநகர் மெயின் மற்றும் குறுக்குதெருவில் தார்சச்சாலைஅமைத்தல் | 43.00 |
| 7 | குரு நகர் குறுக்குதெருவில் தார்ச்சாலைஅமைத்தல் | 7.00 |
| 8 | அச்சம்பட்டிகிழமேல் தெருவில் பேவர் பிளாக் சாலைஅமைத்தல் | 21.00 |
| 9 | அச்சம்பட்டிவடக்குதெற்குகிழமேல் தெருக்களில் பேவர் பிளாக் சாலைஅமைத்தல் | 28.00 |
| 10 | சேர்ந்தமரம் சாலைகுறுக்குதெருக்களில் தார்ச்சாலைஅமைத்தல் | 19.00 |
| 11 | திருவுடையான் சாலையில் தார்ச்சாலைஅமைத்தல் | 50.00 |
| 12 | காந்திநகர் கீழ 4ம் தெருகுறுக்குதெருக்களில் தார்ச்சாலைஅமைத்தல் | 60.00 |
| 13 | பாரதியார் 8ம் (இலவன்குளம் சாலைகிழக்குகுறுக்குதெருதார்ச்சாலைஅமைத்தல் | 8.60 |
| 14 | பாரதியார் கீழ 5ம் தெருதார்ச்சாலைஅமைத்தல் | 11.50 |
| | **மொத்தம்** | **331.10** |
| **II. சாலைகள் (மறுசீரமைப்பு)** | | |
| 1 | காந்திநகர் முதல் தெரு | 17.50 |
| 2 | காந்திநகர் 2ம் தெரு | 17.50 |
| 3 | லெட்சுமியாபுரம் 7ம் தெரு | 83.00 |
| 4 | பாரதியார் 5ம் தெரு | 6.70 |
| 5 | பாரதியார் 6ம் தெரு | 13.00 |
| 6 | பாரதியார் 7ம் தெரு | 6.70 |
| | **மொத்தம்** | **144.40** |
| III | மயானம் சுற்றுச்சுவர் கழிப்பறைவசதிஏற்படுத்துதல் | |
| 1 | பாட்டத்தூர் மயானத்தில் சுற்றுச்சுவர் மற்றும் கழிப்பறைவசதிஏற்படுத்துல் | 10.00 |
| 2 | காமராஜ் நகர் மயானத்தில் சுற்றுச்சுவர் மற்றும் கழிப்பறைவசதிஏற்படுத்துதல் | 17.00 |
| 3 | காந்திநகர் மயானத்தில் கழிப்பறைவசதிமற்றும் சுற்றுச்சுவர் ஏற்படுத்ததுல் | 8.00 |

| | | |
|---|---|---|
| 4 | திருநெல்வேலிசாலைமயானத்தில் கழிப்பறைவசதிஏற்படுத்துதல் | 3.00 |
| 5 | அம்பேத்கார் நகர் மயானத்தில் கழிப்பறைவசதிஏற்படுத்துதல் | 3.00 |
| | **மொத்தம்** | **41.00** |
| IV | பூங்காஅமைத்தல் மற்றும் மறுசீரமைப்பு | |
| 1 | கோமதிநகர் 1ம் தெருவில் பூங்காசீரமைப்பு | 15.00 |
| 2 | ஏவிஆர்எம்விநகர் பூங்காஅமைத்தல் (மியாவாக்கி) | 76.00 |
| 3 | கார்த்திநகர் பூங்காஅமைத்தல் | 45.00 |
| 4 | காவேரிநகர் பூங்காஅமைத்தல் | 72.00 |
| 5 | காமராஜ் நகர் பூங்காஅமைத்தல் | 18.00 |
| 6 | பி.எஸ் நகர் பூங்காஅமைத்தல் (மியாவாக்கி) | 57.00 |
| 7 | சேர்ந்தமரம் சாலைபூங்காஅமைத்தல் | 36.00 |
| | **மொத்தம்** | **319.00** |
| | **மொத்தம்** | **835.50** |

மேற்கண்ட அனைத்து பணிகளுக்கும் I முதல் V வரை உள்ள இனங்களுக்கு ரூ.886.50 லட்சம் மதிப்பீட்டில் ஏதேனும் திட்டத்தின் கீழ் அரசின் முழு மான்யத்தின் கீழ் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணைஅனுப்ப மன்றம் அனுமதிக்கு.
தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 1192

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட திருவள்ளுவர் பூங்கா மேல்நிலைத்தொட்டி மெயின் வால்வு 8'' வால்வு 1 எண்ணம் திருவேங்கடம் சாலை செல்வா சில்க்ஸ் ரோடு சந்திப்பு 4" வால்வு 1 எண்ணம் தேவைப்படுகின்றது. மேற்கண்ட நான்கு புதிதாக வால்வுகள் வாங்குவதற்கு மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.136000/–க்கு குடிநீர் பணியின் அவசரம் அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி 24.2.2021ல் பெறப்பட்டது. கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு தொடர்நடவடிக்கைக்கு மேற்கொண்டதற்கும் மன்ற அனுமதிக்காக.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | மதிப்பீட்டுத் தொகையை விட | |
|---|---|---|---|---|
| | | | கூடுதல் | குறைவு |
| 1 | திரு. **P.**சிவா | ரூ 1,36,000/- | மதிப்பீட்டுக்குச்சமம் | |
| 2 | திரு. **S.** கார்த்தீசன் | ரூ 1,36,000/- | 3.27% | --- |

மேற்படி பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.136000/– பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தகாரர் திரு.பி.சிவா என்பவர் மதிப்பீட்டுத்தொகைக்கு சமமாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு.பி.சிவா என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் அனுமதிக்காக.
தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 1193

சங்கரன்கோவில் நகராட்சி ஆணையாளர் குடியிருப்பின் மேல் தளத்தில் GI Sheet ல் ஆன மேற்கூரை அமைக்குமாறு ஆணையர் அவர்கள் அறிவுறுத்தியதின் அடிப்படையில் ஆணையாளர் குடியிருப்பில் மேற்கூரை அமைக்க ரூ2,42,000/- லட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றத்தின் அனுமதிக்காக.

தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 1194

சங்கரன்கோவில் நகராட்சி பராமரிப்பிலுள்ள தெருவிளக்குகளை தனியார் மூலமாக பராமரிப்பு பணி மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் தலைமை பொறியாளர் அவர்களின் கடித ந.க.எண்: 13899/2016/DO1 நாள்: 04.07.2019ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்அடிப்படையில் தெருவிளக்குகள் பராமரிக்க ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு இந்நகர்மன்ற தீர்மான எண்:756, நாள்:30.08.2019-ன் படி அனுமதி பெறப்பட்டு ஸ்ரீ கங்கா எலக்டிக்கல்ஸ் தனியார் நிறுவனத்திற்க்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள 01.09.2019 முதல் 31.08.2020 வரை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. ஒப்படைக்கப்பட்ட காலம் 31.08.2020ல் முடிவுடைகிறது. மேலும் ஒரு வருடத்திறிக்கு ஏற்கனவே பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு வரும் ஸ்ரீ கங்கா எலக்டிக்கல்ஸ் நிறுவனத்திடம் ஒரு வருடத்திறக்கு ( 01.09.2020 முதல் 31.08.2021 முடிய) தெரு விளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள காலநீடிப்பு செய்ய இந்நகர்மன்ற தீர்மான எண்: 998 நாள்: 31.08.2020ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது காலநீடிப்பு காலம் 31.08.2021ல் முடிவடைகிறது. எனவே மேலும் தெருவிளக்குகள் தனியார் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் தலைமை பொறியாளர் அவர்களால் மூன்று வருடங்களுக்கு அனுமதி பெறப்பட்டுள்ளதாலும் மேலும் ஒரு வருடத்திறிக்கு ஏற்கனவே பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு வரும் ஸ்ரீ கங்கா எலக்டிக்கல்ஸ் நிறுவனத்திடம் ஒரு வருடத்திறக்கு ( 01.09.2021 முதல் 31.08.2022 முடிய) தெரு விளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள காலநீடிப்பு செய்ய ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட பராமரிப்பு கட்டணப்படி செய்யவும் இதற்கான கூடுதல் செலவுத் தொகை ஒரு வருடத்திற்க்கு ரூ.26.95 இலட்சத்தினை பொது நிதியில் மேற்கொள்ளுவதற்க்கு மன்ற அனுமதிக்காக.

தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 1195

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு 14 குமரன் தெரு மேல் பகுதியில் குடிநீர் விநியோகம் சீராக கிடைக்காத காரணத்தினால் அப்பகுதியிலுள்ள பொது மக்கள் புகார் தெரிவித்தனர். எனவே, அப்பகுதிக்கு கூடுதல் அழுத்தம் கொடுத்து குடிநீர் விநியோகம் சீராக வழங்குவதற்கு பணியினை மேற்கொள்ள ரூ.71,000/- தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலகக்குறிப்பு

1. மன்ற அனுமதிக்கலாம்
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள குடிநீர் நிதியிலிருந்து செலவு மன்றம் அனுமதிக்கலாம்.
3. தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 1196

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு 26 சங்கர் நகர் 3ம் தெரு மேல் பகுதியில் சுமார் 20 வீடுகளுக்கு குடிநீர் விநியோகம் சீராக கிடைக்காத காரணத்தினால் அப்பகுதியிலுள்ள பொது மக்கள் புகார் தெரிவித்தனர். எனவே, அப்பகுதிக்கு குடிநீர் விநியோகம் சீராக வழங்குவதற்கு மேற்கண்ட பணியினை மேற்கொள்ள ரூ.72,000/- தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்காக.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ளகுடிநீர் நிதியிலிருந்து செலவு மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண் : 1445/2021/இ2)

தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது

தனி அதிகாரி மற்றும்
ஆணையாளர்,
சங்கரன்கோவில் நகராட்சி.

நாள் – **23.07.2021.**